# செயலாளர் மடல்

அன்புடையீர் வணக்கம்.

**முன்னுரை:**

நமது நிழல் நம்மைத் தொடர்ந்து வருவதுபோல நாம் ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை மூலம் செய்யும் நன்மைகளும் நம்மைத் தொடர்ந்து வரும் என்று நமது முன்னோர்கள் கூறியுள்ளனர். நாம் கடின உழைப்பாளிகள், நாம் பிறர்க்கு உதவுவது தெரியக்கூடாது என்ற எண்ணம் படைத்தவர்கள். ஆகவே தான், தாங்கள் ஏழை மாணவர்களுக்கு இயன்ற உதவியினைச் செய்து வந்தீர்கள். அதையே கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக ஒருங்கிணைந்து தொய்வின்றிச் செய்து வருகிறது ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை.

நிர்ணயம் செய்ய வேண்டியது நாம் - நாம் மட்டுமே.
விரும்பும் நிலையை அடைய செயல்படவேண்டியது நாம்-நாம் மட்டுமே.

**என்னைப் பற்றிய சில வரிகள்:**

உறவினராகிய தாங்கள் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பரவலாக இருக்கிறீர்கள். ஏன் உலகின் அனைத்து நாடுகளிலும் வசித்து வருகிறீர்கள்.

வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் "பூமி விளைவது புண்ணியவானுக்கே" என்று கூறுவார்கள். அதன்படி "அழுதுகொண்டிருந்தாலும் உழுதுகொண்டிரு" என்ற பழமொழியில் நாட்டமுடைய முழுநேர விவசாயி. ஓர் அறிவு படைத்த தாவரங்களுடனும், வீட்டு விலங்குகளுடனும் இருப்பதே எனது பொழுதுபோக்கு. ஆகவே, தாவரங்களிடம் கட்டளையிட்டே பேசிப் பழகி விட்டேன். அறக்கட்டளையின் வளர்ச்சியில் தொய்வு ஏற்பட்டுவிடக் கூடாது என்று எண்ணியே தங்களிடம் இதை இப்படித்தான் செய்ய வேண்டும் என்று கூறுகிறேன்.

உழைக்கப் பிறந்தேன். உழைப்புக்கேற்ற பலனை இறைவன் வழங்குவான் என்ற கொள்கையுடையவன். ஆகவே, பணத்தைத் தேடிப் போனதில்லை, பொது வாழ்விலும் எனது சொந்த வாழ்க்கையிலும் இறைவன் திருவருளால் பணம் என்னைத் தேடி வருகின்றது.

**அறக்கட்டளை துவங்குவதற்கு முன்பு**

திங்களூர் மடாதிபதி தெய்வத்திரு.M.P.ராஜு அவர்கள் உதவியால், உயர்திரு.மந்திரிக்கவுண்டர் முயற்சியால் பரிசளிப்புவிழா நடத்தி வந்தனர்.



உயர்திரு.M.P.ராஜு அவர்களுக்குப் பின்னர் சிறு தொய்வு ஏற்பட்டது. உயர்திரு.மந்திரிக் கவுண்டர் அவர்கள் முயற்சியால், உயர்திரு.M.P.R. வேலாயுதசாமி அவர்கள் உதவியால் பரிசளிப்பு விழா நடத்தினர். திரு.மந்திரிக்கவுண்டர் அவர்கள் 31.08.1997ஆம் நாள் நடைபெற்ற 1996-1997ம் கல்வி ஆண்டிற்கான பரிசளிப்பு விழாவிற்கு மாணவர்களைத் தேர்வு செய்யும் பொறுப்பினை உயர்திரு.மந்திரிகவுண்டர் அவர்களின் உடல்நிலை காரணமாக என்னிடம் வழங்கினார். நோட்டீஸ் அடித்து முக்கிய ஊர்களுக்கு அனுப்பி வைத்து 31.08.97ம் நாள் அப்பிச்சிமார் மடத்தில் பரிசளிப்புவிழா நடத்தினோம். அடுத்த ஆண்டும் அதுபோலவே 19.07.1998ம் நாள் நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்டவர்கள் ஒரு கை ஓசை தராது என்று நாங்களும் தருகிறோம் என்று அவரவர் பங்காக மாணவ, மாணவிகளுக்கு நன்கொடை வழங்கினர். பரிசளிப்பு விழாவை முறைப்படுத்த வேண்டும் என்று எண்ணினேன். பொதுவாக நாம் செல்லுகின்ற கூட்டங்களில் கூட்டம் ஆரம்பிக்கும் சமயம் அவசர அவசரமாக ஒரு நோட்டை வாங்கி வருவார்கள். கையெழுத்துப் பெறுவார்கள் நிதியும் வசூல் செய்வார்கள். அத்துடன் மறைந்து போய்விடும். இதுதான் நடைமுறையில் இருந்து வந்தது.

பரிசளிப்பு விழா எக்காலத்திலும் நிலைத்து நிற்க வேண்டும். அதற்கு ஓர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அதுவும் அரசு அங்கீகாரம் பெற்ற அமைப்பாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்த சமயம் நமது சமூகத்தினர் 1992ஆம் ஆண்டில் இரண்டு ரூபாய் பரிசுச்சீட்டு நடத்த A.K.சாமிநாதன், K.M.விஸ்வநாதன் மற்றும் ல.கள்ளிப்பட்டி நண்பர்கள், தமிழ்நாடு வேட்டுவகவுண்டர்கள் சங்க பெரியார் மாவட்ட நிர்வாகிகள் நடத்தினர். ல.கள்ளிப்பட்டியில் நடைபெற்ற குழுக்களில் மீதமான தொகையை திரு.K.U.செங்கோட்டையன், திரு.ராமன், திரு.K.A.மகாலிங்கம் ஆகியோர் பெயரில் நிரந்தர வைப்பு நிதியாக இட்டுவைத்தனர். 1999ல் வங்கியில் இருந்து கிடைத்த ரூ.15000/-ஐ எவ்வாறு பாதுகாப்பது என்ற சிந்தனையில் இருந்த சமயம் நமது மாணவர்களின் கல்விப்பணிக்குச் செலவிடுவதற்காக ஒரு அறக்கட்டளையைத் துவங்குவது பற்றிய கருத்தினை வைத்தேன்.

சலங்கபாளையத்தில் 02.04.1999ஆம் நாள் ஒரு கூட்டத்தைக் கூட்டினோம். அதில் K.A.மகாலிங்கம், S.தெய்வசிகாமணி, S.ராமன், M.சிவானந்தம் போன்ற பலரும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் அவரவர் கருத்துக்களை எடுத்துக்கூறி அதுவே சரியானது என்று வாதிட்டனர். இறுதியாக பதிவு பெற்ற அமைப்பை உருவாக்குவது என்றும் ஆண்டு சந்தா வசூல் செய்வது என்பது நீண்ட காலங்களுக்கு நடைமுறைப்படுத்த முடியாத

செயல் என்பதால் ஆயுள்சந்தா வசூல் செய்வது எனவும் அவரவர் விருப்பம்போல ஒவ்வொரு ஆண்டும் நன்கொடை வழங்கலாம் எனவும் முடிவு செய்தோம். உயர்திரு.S.தெய்வசிகாமணி அவர்கள் ஈரோட்டில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்கிறேன் என்றும் அதில் ஈரோட்டில் உள்ள நமது உறவினர்கள் பலரும் கலந்துகொள்வார்கள் என்று கூறினார். அவர் 03.05.1999ம் நாள் ஈரோடு பூர்ணா ஓட்டலில் கூட்டிய கூட்டத்தில் நாம் எதிர்பார்க்காத அளவிற்கு அரங்கு நிறைய கலந்துகொண்டனர். கூட்டத்திற்கு உயர்திரு.N.S.ராமசாமி அவர்கள் தலைமை தாங்கினார். கூட்டத்தில் பலவிதமான கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டோம். பல பதிவு பெற்ற அமைப்புகளில் பொறுப்பில் இருந்த அனுபவம் பதிவு பெற்ற அமைப்புகள் ஏன் தொடர முடிவதில்லை என்ற சிந்தனை சலங்கபாளையம் பேரூராட்சி கவுன்சிலராக தேர்வு பெற்று ஓர் ஆண்டிற்குள் ராஜினாமா செய்த காரணங்கள். கோவை வானொலி நிலைய கிராமிய விவசாய ஆலோசனைக்குழு (மாவட்ட உயர் அதிகாரிகள் மற்றும் முதன்மை ஆலோசகர்கள் கலந்துகொள்வர்) உறுப்பினராக இரண்டு ஆண்டுகள் சேவை செய்த அனுபவங்கள் என்னை இந்த உலகிற்கு மனிதனாக எடுத்துக்காட்டிய இந்த சமுதாயத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணியே பிறர் செய்ய வேண்டும் என நினைப்பதை நாமே செய்வோம், அதுவும் இன்றே இப்பொழுதே இக்கணமே சிறப்பாக செய்யமுடியும் என்ற நம்பிக்கையில் நான் செயலாளராகவும், திரு.K.U.செங்கோட்டையன் அவர்கள் தலைவராகவும், திரு.S.K.லிங்கப்பன் அவர்கள் பொருளாளராகவும் தற்காலிகமாகப் பொறுப்பேற்றுக்கொண்டு அன்றே செயல்படத் துவங்கினோம்.

**அறக்கட்டளை பதிவுக்குமுன் 1998-99க்கான பரிசளிப்புவிழா**

திங்களூர் அப்பிச்சிமார் மடத்தில் 1998-1999ம் கல்வியாண்டிற்கான பரிசளிப்பு விழாவைச் சிறப்பாக நடத்த கோப்பம்பாளையம் K.V.காளியப்பகவுண்டர் அவர்கள், அப்பிச்சிமார் மடாதிபதி தெய்வத்திரு.M.P. ராஜு அவர்கள், கண்ணப்பர் ஐ.டி.ஐ. முன்னாள் தலைவர் Dr.P. தேவசேனாபதி அவர்களுக்குக் காணிக்கையாக விழாமலர் புத்தகம் அச்சடித்து நமது உறவினர்களுக்கு அனுப்பி 18.7.1999ம் நாள் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக பரிசளிப்பு விழா நடத்தினோம். அதில் நமது கௌரவத்தலைவர் உயர்திரு.M.P.R.வேலாயுதசாமி அவர்கள் +2ல் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறுபவர்க்கு ரூ.1500/- பரிசாகசவும், பரிசு பெறுபவர் MBBS., BE., படித்தால் ரூ.1000/-ம் ஆக ரூ.2500/- வழங்கினார். இரண்டாம் பரிசாக திரு.M.சிவானந்தம் அவர்கள், கொங்கு வேட்டுவகவுண்டர் அறக்கட்டளை



சிவன்மலை செயலாளர் திரு.R.பழனிச்சாமி அவர்கள் ரூ.500/- வீதம் ரூ.1000/- வழங்கினார்கள். கணிதத்தில் முதல் மதிப்பெண் பெற்றவர்க்கு பேராசிரியர் திரு.C.முருகேசன் அவர்கள் ரூ.500/-ம், ஈரோடு மாவட்டத்தில் முதல் மதிப்பெண் பெற்றவர்க்கு திரு.K.A.மகாலிங்கம் அவர்கள் ரூ.500/-ம் வழங்கினார்கள். 10ம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்றவருக்கு தெய்வத்திரு. தெய்வசிகாமணிகவுண்டர் நினைவாக Dr.தெ.தர்மராஜ் அவர்கள் ரூ.1000/-ம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறார்கள்.

இரண்டாவது பரிசாக Dr.K.ஆண்டமுத்து அவர்கள், ரூ.500/- வழங்கினார். பாடவாரியாக முதல் மதிப்பெண் பெற்றவர்க்கு நானும், N.R.சுப்பிரமணியம், S.தெய்வசிகாமணி, M.நடராஜன் அறச்சலூர், அருமை ஆறுமுகம் போன்றவர்கள் தலா ரூ.100/- வழங்கினார்கள். மேலும் விஞ்ஞானி Er.V.K.வெங்கடாசலம் கேரளா ரூ.600/-ம், S.சந்திரசேகரன் ரூ.200/-ம் ஆப்பக்கூடல் பழனிச்சாமிகவுண்டர் ரூ.500/-ம் மற்றும் பலரும் பாசுத் தொகையாக வழங்கினார்கள்.

உயர்திரு.மணிமொழி M.A., M.Sc., (Agri) அவர்கள் 1999-2000ம் கல்வியாண்டில், +2வில் முதல் மதிப்பெண் பெறுபவருக்கு ரூ.5000/- வழங்குவதாகவும், பட்டயக்காளிபாளையம் திரு.Er.பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆண்டுக்கு ரூ.500/- வழங்குவதாக உறுதி கூறினார்கள்.

**முறையான அமைப்புக் கூட்டம் :**

ஈரோடு சம்பத்நகர், கலைவாணி மெட்ரிக் பள்ளியில் கடந்த 12.9.99ம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு உயர்திரு.M.P.R.வேலாயுதசாமி அவர்கள் தலைமையில், உயர்திரு.R.மந்திரிக்கவுண்டர் அவர்கள் முன்னிலையில் முறையான அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் உயர்திரு.M.P.R.வேலாயுதசாமி அவர்கள் நிரந்தர கௌரவத்தலைவராகவும் நிர்வாகக்குழு உறுப்பினராகவும் மற்றும் நிர்வாகிகள் பொறுப்பேற்றனர். அமைப்பிற்கு ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை என்று பெயரிடுவது எனவும், உறுப்பினர் கட்டணம் திரும்ப வழங்குவது இல்லை எனவும், உறுப்பினர் கட்டணம் நிரந்தர வைப்புநிதியாக வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டி மற்றும் உறவினர்கள் வழங்கும் நன்கொடை மூலம் அறக்கட்டளை செயல்படுவது எனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை முறையாக வரவு செலவுகளை பராமரிக்கவும், நிகழ்வுகளைப் பதிவு செய்யவும் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம் 1975ன் படி 25.10.1999ம் நாள் பதிவு எண் 48/99ஆகப்

பதிவு செய்து இதுவரை தொய்வின்றி மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்றால் நமது லட்சியம் தகுதி வாய்ந்தது என்பதனால் அல்ல நமது வழிமுறைகள் வெற்றிக்கு உத்திரவாதம் என்பதனாலும் தாங்கள் வழங்கி வருகின்ற பொருளுதவியும், பிரதிபலன் பாராமல் நமது ஒற்றுமையுடன் கூடிய உடல் உழைப்பும், தாங்கள் வழங்கிய மேலான ஆலோசனைகளும், நமது மாணவ மாணவியர் குடும்பம் சூழ வருகை தந்து பரிசுத்தொகையைப் பெற்றுச் செல்வதுடன் நமது கௌரவத் தலைவர் அவர்களின் கண்டிப்புடன் கூடிய அறிவுரையும் தான் எனக் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**அறக்கட்டளைக்கு நமது பணி:**

நாம் செல்கின்ற பாதையை உபயோகிக்காவிட்டால் அதில் புல், பூண்டுகள் முளைத்து பாதை இல்லாமல் மூடிவிடும். போகவும், வரவும் இருந்தால் தான் உறவு. தாங்கள் அறக்கட்டளையில் உறுப்பினராக இருந்தால் மட்டும் போதாது. ஒவ்வொரு ஆண்டும் நன்கொடை வழங்கினால் போதாது. நாம் நடத்தும் பரிசளிப்புவிழாவில் வரும் காலங்களில் அவசியம் கலந்து கொண்டு நமது நட்பை, உறவைப் புதுப்பித்துக்கொள்வோம்.

**கண்ணப்பர் கல்வி மடல்:**

ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளையின் முன்னாள் தலைவர் திரு.N.S.ராமசாமி அவர்கள் "போகவும் வரவும் இருந்தால் தான் உறவு" உறவுகளைப் புதுப்பித்துக்கொள்ள நமது கருத்துக்களை அடிக்கடி பரிமாறிக்கொள்ள ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளையின் வெளியீடாக "கண்ணப்பர் கல்வி மடல்" எனும் மாத இதழ் RNI. Regd.No.TNTAM 2003/ 12499ஆகப் பதிவு பெற்று 2004ம் ஆண்டு முதல் ஆசிரியர் S.கைலாசம் அவர்கள் கைவண்ணத்தில் இதுவரை தொய்வின்றி வெளிவருன்றது.

**நமது இணையதளம் www.vettuvagounder.org :**

ஈரோடு மாவட்டம், பு.புளியம்பட்டி பகுதியில் பிறந்த Er.K.மோகன் குமாரவேல் அவர்கள் தற்போது பெங்களூரில் வசித்து வருகிறார். அவர் தாமாக முன்வந்து தனி ஒருவராகவே www.vettuvagounder.org என்ற இணைய தளத்தை துவங்கி உலகம் முழுவதும் உள்ள நமது உறவினர்கள் நமது வரலாறை நினைவு கூறவும், நமது உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று கருதி அறக்கட்டளையின் நிகழ்வுகளைச் சிறப்பாக வெளியிட்டு அறக்கட்டளை வளர்ச்சியின் முக்கியக் காரணியாக அமைந்தது. அவர் பணி மென்மேலும் வளர, தொடர வாழ்த்துகிறோம். மேலும் ஸ்ரீ



கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை சார்பாக நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

**வேட்டுவர் சமூக ஆவணங்கள்:**

நமது வரலாறு வாய்வழிச் செய்தியாக மட்டுமே இருந்தது. வாய்வழிச் செய்திகள் எந்த அளவிற்கு உண்மையானவையாக இருக்கும் என்பது தாங்கள் அறிந்ததே. வாய்வழிச் செய்திகளும் மறந்து போய்விடும் என எண்ணி நமது சமுதாயத்திற்கு ஆதாரப்பூர்வமான வரலாற்றுநூல் தேவை என்பதை நன்குணர்ந்து நமது வரலாறு மறைந்து போய்விடக்கூடாது, நமது வரலாறு மண்ணுக்குள் புதைந்துபோய்விடக் கூடாது, நமது காலத்திற்குப் பின்பும் நமது பேரக்குழந்தைகளுக்கு வழிகாட்டியாக, வாழ்க்கைப்பாடமாக இருக்க ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை சார்பாக, தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக கல்வெட்டு தொல்லியல்துறை முன்னாள் தலைவர் உயர்திரு.புலவர்.செ.இராசு M.A., M.Phd., அவர்கள் எழுதிய 272 பக்கங்களை உடைய வேட்டுவர் சமூக ஆவணங்கள் எனும் நூல் உயர்திரு.Dr.C.மயிலேறு ரவீந்திரன் அவர்களின் பெரும் முயற்சியால் 14.01.2009ஆம் நாள் தைத்திங்கள் தமிழர் திருநாளில் ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளையின் தலைவர் உயர்திரு.ஜெமினி S.கைலாசம் அவர்கள் தலைமையில் திங்களூர் மயில் மகாலில் நடைபெற்ற விழாவில் மூத்த வழக்கறிஞர் தெய்வத்திரு.M.P.சின்னராஜு அவர்கள் வெளியிட உயர்திரு. V.K.சின்னசாமி Ex.MLA., Ex.M.P. அவர்கள் பெற்றுக்கொண்டார். விழாவில் நமது சமூகப் பெரியோர்கள் கொங்குநாடு வேட்டுவகவுண்டர் சங்க தலைவர் S.மருதமுத்துகவுண்டர், தமிழ்நாடு வேட்டுவகவுண்டர் சங்க தலைவர் O.S.N.செங்கோட்டுவேலப்பன், கொங்கு சிவன்மலை அறக்கட்டளை தலைவர் K.P.காளியப்பன், செயலாளர் R.பழனிச்சாமி, V.A.ஆண்டமுத்து Ex.MLA., P.சிதம்பரம் Ex.MLA., ரஞ்சிதம் துரைசாமி, பேராசிரியை சகுந்தலா, C.அப்பாச்சி, P.முத்துமணி, ஆவரி. அய்யாசாமி, Dr.P.வேலுசாமி, M.மனோகரன், வடிவேல் சென்னை, M.சுரேஷ்ராஜன், மற்றும் Dr.கந்தசாமி, ஆடிட்டர் நமச்சிவாயம், முத்தரையர் சங்க முன்னாள் தலைவர் T.ஆண்டியப்பன், பூலுவ சங்கத்தலைவர் M.பழனிச்சாமி, வரலாற்று ஆய்வாளர்கள் பேரா.இராஜசேகர தங்கமணி, இல.பரணர், நந்தர் (எ) தங்கம் விஸ்வநாதன், கை.அருணாசலம், V.K.நல்லசாமி, S.K.லிங்கப்பன், T.மணி, தவசி சசிகுமார், V.பரமசிவகவுண்டர், N.பழனிச்சாமி, M.இராமசாமி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். "வேட்டுவர் சமூக ஆவணங்கள்" நூல் ஆசிரியர் புலவர்

திரு.செ.இராசு அவர்களுக்கு Dr.திரு.C.மயிலேறு ரவீந்திரன் அவர்கள் நினைவுப் பரிசு வழங்க, ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை சார்பாக கௌரவப்படுத்தினோம்.

வேட்டுவர் சமூக ஆவணங்கள் எனும் நமது வரலாற்றுநூல் அனைத்து சமூகத்தினரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலில் தமிழ்நாடு அரசு கன்னிமாரா பொது நூலக இயக்குநர் வேண்டுகோளை ஏற்று 2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் நாள் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்கும் குறைந்தவிலையில் 1000 புத்தகங்கள் உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**செல்வி ரேணுகாதேவி IPS மற்றும் திரைப்பட இயக்குநர் வருகை :**

05.07.2009ம் ஆண்டு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் நமது சகோதரி செல்வி ரேணுகாதேவி IPS அவர்கள் விழா துவக்கம் முதல் நிறைவு வரை நம்மோடு இருந்து விழா நிறைவடைந்த பின் சுமார் 75 நிமிடங்கள் மாணவ, மாணவிகளோடு உரையாடி, ஊக்கப்படுத்தினார். அவர்களுக்கு அப்பிச்சிமார் வித்யா மந்திர் மேல்நிலைப்பள்ளி தாளாளர் திருமதி.வேணுகாதேவி மயிலேறு ரவீந்திரன் அவர்கள் நினைவுப் பரிசினை வழங்கினார். மற்றும் ஒசூர் டைட்டான் நிறுவன பொதுமேலாளர் திரு.வெள்ளியங்கிரி அவர்கள் செல்வி. ரேணுகாதேவி IPS அவர்களுக்கும், திரைப்பட இயக்குநர் சலங்கை துரை அவர்களுக்கும் 12 மாணவ, மாணவியர்க்கு கைக்டிகாரமும் வழங்கிக் கௌரவப்படுத்தினார்.

நமது அறக்கட்டளையின் செயல்கள் வெளிப்படையாக இருந்தமையாலும், நோக்கம் சிறப்பாக அமைந்ததாலும், சேவையையே நோக்கமாகக் கொண்டு, சேவையையே லட்சியமாகக் கொண்டு செயல்பட்டதால், நமது உறவுகள் மேம்பட்டு இறைவன் திருவருளால் தங்கள் ஒத்துழைப்பால் ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளைக்கு கடந்த 12 வருடங்களாகத் தொடர்ந்து தொய்வின்றி செயல்பட்டு வருகிறது எனக் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**வருமானவரி நிரந்தரக் கணக்கு எண்:**

ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளையின் வருமானத்திற்கு வரி செலுத்தும் முகமாக மத்திய அரசின் வருமான வரிச் சட்டம் 1961ன் படி வருமான வரித்துறையின் நிரந்தரக் கணக்கு எண் AAJTS3264M ஆக 25.10.2010ஆம் நாள் பதிவு செய்யப்பட்டுள்ளது.



**அறக்கட்டளையின் நிதி நிலைமை:**

ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளையின் சார்பாக கவுந்தப்பாடி கிளை IOB வங்கியில் வைக்கப்பட்டுள்ள ரூ.6,00,000/- நிரந்தர வைப்பு நிதி மூலம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வரும் வட்டி SB.019801000021511 என்ற சேமிப்புக் கணக்குக்கு வரும் வகையில் இட்டுவைக்கப்பட்டுள்ளது. கண்ணப்பர் கல்வி மடல் வரவு-செலவு முறையாகத் தனியாகப் பேணப்படுவதாலும், ஈரோடு சிண்டிகேட் வங்கியில் கண்ணப்பர் கல்வி மடல் என்ற பெயரில் ரூ.1,55,000/- நிரந்தர வைப்பு நிதியாக இட்டு வைக்கப்பட்டுள்ளது.

**அறக்கட்டளை நடந்து செல்லுகின்ற பாதை:**

நமத் முன்னோர்கள் வீட்டைக்கட்டிப்பார், கல்யாணம் பண்ணிப்பார் என்று கூறுவார்கள். வீடு கட்டுவது ஒரு குடும்பத்தில் உள்ள நபர்களுடன் நிறைவடைந்து விடுகிறது. கல்யாணம் இருகுடும்பத்தில் உள்ள உறவினர்களுடன் ஏறத்தாழ நிறைவடைந்து விடுகிறது. நமது மாணவர்கள் ஏழ்மையின் காரணமாக யாரிடம் சென்று உதவி கேட்பது, நாம் சென்று உதவி கேட்டால் வழங்குவார்களா? என்றே காலத்தைக் கடத்திக் கொண்டு இருப்பவர்களை இனம் கண்டு தங்கள் உதவியால் அறக்கட்டளை உதவி வருகிறது. வருகின்ற காலங்களில் அடுத்த தலைமுறையினராவது பொருளாதாரத்தில் உயர்நிலையை அடைய வேண்டும் என்ற நற் சிந்தனையில் இறைவனின் நல்லாசியோடு நமது சமுதாயத்தில் உள்ள சேவை மனம் கொண்டவர்களை ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை.

நமது சமுதாய அறக்கட்டளை கடந்த 12 ஆண்டுகளில் சேவை மனம் கொண்ட 337 உறுப்பினர்களுடன் நமக்குள் நடைமுறை சட்டதிட்டங்களை வகுத்துக்கொண்டு, அறக்கட்டளை உறுப்பினர்கள் அந்தச் சட்டதிட்டங்களுக்குக் கீழ்படிந்து நடப்பதால் சிறப்பாகச் செயல்படுகின்றன. அறக்கட்டளையின் சட்டதிட்டங்களை மதித்து நடப்பவர்கள் உறுப்பினர்களாகச் சேர அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை துவங்கும்போது எந்த நிதியாதாரமும் இல்லை என்பது தாங்கள் அறிந்ததே. அறக்கட்டளைக்கு எவ்வளவு நன்கொடை ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கும் என்பது பரிசளிப்பு விழா மற்றும் உதவிதொகை வழங்கும் விழா நிறைவடையும் தருவாயில் தான் தெரியவரும். எவ்வாறு திட்டமிடுவது என்பதை தங்கள் சிந்தனைக்கு விட்டுவிடுகிறேன்.

+2வில் முதல் பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் இரண்டாவது பரிசுத்தொகைக்கு குறையாமல் பிரித்து வழங்கியும், இதர பரிசுகள் அறக்கட்டளை கூறுகின்ற பரிசுத் தொகையினை முழுமையாக வழங்கியும் வந்தோம். உதாரணமாக 10ம் வகுப்பில் கணக்குப் பாடத்தில் 100க்கு 100 மதிப்பெண் பெறுபவர்கள் 10, 12 மாணவ, மாணவியர்க்கு மேல் பெறுவதுண்டு. கடந்த வருடங்களில் சுமார் 100 மாணவ, மாணவியர் பரிசு பெறத் தகுதியுடையவர்களாக ஒவ்வொரு வருடமும் இருப்பார்கள். ஆனால் கடந்த 2010-2011ம் கல்வியாண்டில் 195 மாணவ, மாணவியர் பரிசுத்தொகை பெறத் தகுதி பெற்றனர். பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் அவர்களுக்குரிய பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

ஆக மொத்தத்தில் நமது அறக்கட்டளைக்கு எவ்வளவு நன்கொடை கிடைக்கும் என்பதும், எத்தனை மாணவ, மாணவியர் இன்ன, இன்ன பரிசுகள் பெறத் தகுதியுடையவர்கள் என்பதும், மொத்தமாக பரிசுத்தொகை எவ்வளவு வழங்க வேண்டும் என்பதும், மதிய உணவு எவ்வளவு பேருக்குச் செய்ய வேண்டும் என்பதும், கூட்ட அரங்கை எத்தனை பேர் அமரும்படி அமைப்பது என்பதும், நம்மை வழிநடத்திச் செல்லுகின்ற இறைவனுக்கே தெரியும். ஆக மொத்தத்தில் நமது முன்னோர்கள் செய்த நற்பயனால் அறக்கட்டளை நிர்வாகிகள் மூலம் இறைவனே ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளையை வழிநடத்திச் செல்கிறார். அறக்கட்டளை நிர்வாகிகள் ஒரு கருவியாகத்தான் செயல்படுகிறார்கள் என்பதால் அறக்கட்டளையின் நன்மைகள் அனைத்தும் நம்மை வழிநடத்திச் செல்கின்ற இறைவனையே சேரும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை தொய்வின்றி மேலும் சிறப்பாகச் செயல்பட தங்களுடைய ஆலோசனைகளைக் கடிதம் வாயிலாகத் தெரியப்படுத்துவீர்கள் என அறக்கட்டளை சார்பாக நம்புகின்றோம்.

**நன்றி பாராட்டுதல்:**

ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை துவங்குவதற்கு முன்பு இப்பொறுப்பினை இவனிடம் வழங்கினால் சிறப்பாகச் செயல்படுவான் என்ற நம்பிக்கையில் பொறுப்பினை வழங்கி என்னை வழிநடத்திச் செல்கின்ற உயர்திரு.மந்திரிகவுண்டர் அவர்களுக்கும், அறக்கட்டளை நடத்துவதில் உள்ள சிரமங்களை எடுத்துக்கூறி, ஆலோசனைகளை வழங்கி பொருளாதார உதவிகளையும் வழங்கி, எனக்கு தைரியத்தையும் உற்சாகத்தையும வழங்கி, பொதுக்குழுவிற்கும், பரிசளிப்பு விழாவிற்கும் மதிய உணவு வழங்கிக்கொண்டிருக்கும் உயர்திரு.M.P.R.வேலாயுதசாமி



அவர்களுக்கும், அறக்கட்டளையின் அமைப்புக் கூட்டத்திலேயே கலந்துகொண்டு உறுப்பினர் கட்டணம் ரூ.1000/-, நுழைவுக்கட்டணம் ரூ.50/- ஆக ரூ.1050/- உடனே வழங்கிய 27 உறுப்பினர்களுக்கும், அறக்கட்டளை நிர்வாகிகளின் வேண்டுகோளை ஏற்று உடனே உறுப்பினரான அறக்கட்டளை உறுப்பினர்களுக்கும், நன்கொடை வழங்கிய நன்கொடையாளர்களுக்கும் , அறக்கட்டளை பதிவு செய்த ஆண்டில் ரூ.15000/- நன்கொடை வழங்கக் காரணமாக இருந்த நல்லுள்ளம் படைத்த உறவினர்களுக்கும், வழங்கிய நல்ல உள்ளங்களுக்கும், எனக்கு ஆலோசனைகளை வழங்கி உற்சாகப்படுத்தி என்னை வழி நடத்திச் சென்ற செல்கின்ற அறக்கட்டளை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், ஆரம்ப காலம் முதல் ஏழை மாணவ, மாணவியர்க்கு உதவித்தொகை வழங்க ஒருங்கிணைந்து நன்கொடை வழங்கி வருகின்ற தொலைத்தொடர்புத்துறை ஊழியர்களுக்கும், பரிசளிப்பு விழா அரங்கம் அமைத்துக்கொடுத்தும், உதவித்தொகை வழங்குவதைத் தனி விழாவாக நடத்த உதவி வருகின்ற திருமதி. வேணுகாதேவி மயிலேறு ரவீந்திரன் அவர்களுக்கும், சுமார் ரூ.50/- ரூ.100/-, ரூ.200/-, ரூ.300/-, ரூ.500/-, ரூ.1000/-, ரூ.2000/-, ரூ.3000/- ரூ.4000/-, என மேலும் நன்கொடையாக வழங்குவதை தங்கள் குடும்பத்தின் முக்கியப் பணியாகக் கருதி "இறைக்கின்ற கிணறுதான் ஊறும்" என நன்கொடை வழங்கி வருகின்ற அறக்கட்டளையின் தூணாக விளங்கும் உறவினர்களுக்கும் அறக்கட்டளையின் பரிசளிப்பு விழாவிற்கு தங்கள் குடும்பத்துடன் நட்பு சூழ வருகை தந்து சிறப்பித்து எங்களின் எளிய பரிசுத்தொகையை தன்னம்பிக்கையுடன் பெற்றுச் சென்ற மாணவ, மாணவியர் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினையும், வாழ்த்துக்களையும் அறக்கட்டளை சார்பாகக் காணிக்கையாக்குகின்றோம்.

**முடிவுரை :**

அறக்கட்டளைக்கு தொடர்ந்து நிதி வந்து கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் அறக்கட்டளை சிறப்பாக தொய்வின்றி செயல்படும். தன் வீடு, தன் மனைவி, தன் பிள்ளை என்ற குறுகிய வட்டத்தை விரிவாக்கி, பொறாமை, ஆணவத்தை விட்டு ஒழித்து ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை இப்படித்தான் செயல்பட வேண்டும் என்று தொலைநோக்கோடு செயல்பட வாருங்கள், வாருங்கள், வாருங்கள் என அன்போடு அழைக்கின்றோம்.

**ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளையின் எதிர்காலத் திட்டம் :**

அறக்கட்டளை என்ன செய்கிறது என்பது முக்கியமல்ல, அறக்கட்டளை

என்ன செய்யப்போகிறது என்பதே முக்கியம். நன்கு படிக்கின்ற ஏழ்மை நிலையிலுள்ள மாணவ, மாணவியரைத் தேடிச் சென்று உதவி வழங்கும் முகமாக நடைபெறுகின்ற 2010-2011ம் கல்வியாண்டில் இருந்து கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படிக்கின்ற மாணவ, மாணவியர் சராசரியாக 85 சதவிகித மதிப்பெண்கள் மற்றும் அதற்கு மேலும், மருத்துவம், விவசாயம், பொறியியல் மற்றும் மூன்றாண்டு தொழிற்கல்வி படிக்கும் மாணவ, மாணவியர் சராசரியாக 90 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெறுகின்ற மாணவ, மாணவியரின் ஏழ்மையைக் கருத்தில் கொண்டு ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளைக்கு கிடைக்கும் நிதியைக் கருத்தில் கொண்டு, அடுத்து வரும் 2010-2011ஆம் கல்வியாண்டிற்கு மட்டும் கல்லூரிக்கட்டணம் முழுமையாகவோ, அல்லது கல்லூரிக்கட்டணம் மற்றும் விடுதிக்கட்டணம் அல்லது ரூ.5000/- குறையாமல் உதவித்தொகை வழங்கி ஆவண செய்ய எண்ணுகிறோம். நன்கொடை வழங்க விருப்பம் உள்ள உறவினர்கள் மற்றும் அறக்கட்டளை உறுப்பினர்கள் அறக்கட்டளை நிர்வாகிகளை அல்லது செயலாளரைத் தொடர்புகொள்ளவும்.

ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை கடந்த பன்னிரண்டு ஆண்டுகள் சிறப்பாக தொய்வின்றி செயல்படுகிறது என்றால் தங்களுடைய ஒத்துழைப்பும், தங்களுடைய ஆலோசனைகளும் தான் காரணமாக அமைந்தன. மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் உதவித்தொகை வழங்கி உற்சாகப்படுத்தி கல்வி கற்க நம்பிக்கையை ஏற்படுத்தியது என்றால் அது நன்கொடையாளர்களாகிய தங்களையே சாரும். கண்ணப்பர் கல்வி மடல் மாதஇதழ் துவங்கி ஏழு ஆண்டுகளைக் கடந்து எட்டாவது ஆண்டில் வெற்றிநடை போடுகிறது என்றால் கண்ணப்பர் கல்விமடல் சந்தாதாரர்கள் மற்றும் விளம்பரதாரர்களாகிய தங்களையே சாரும்.

இந்த இதழ் பற்றிய நல்ல கருத்துக்களை நமது உறவினர்களிடம் எடுத்துக் கூறுங்கள். இந்த இதழில் உள்ள குறைகளையும், மாற்றுக் கருத்துக்களையும் நமது உறவினர்களுடன் கலந்து ஆலோசித்து எழுதியனுப்புங்கள். தாங்கள் எழுதும் கடிதத்தில் தான் அறக்கட்டளையின் செயல்பாடுகள் அமையும், அறக்கட்டளையின் செயல்பாட்டில் தான் நமது சமுதாய வளர்ச்சி அடங்கியுள்ளது.

நம்மை ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை துவங்கச் செய்து அறக்கட்டளையின் வெளியீடாகிய கண்ணப்பர் கல்வி மடல் என்ற மாதஇதழை துவங்கச் செய்து தொய்வின்றி நடைபெற நம்மை வழிநடத்திச் செல்கின்ற ஸ்ரீ அம்மன் அருட்கருணையை வணங்குவோம்.

நன்றி!

- செயலாளர்

## ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளையின் வரவு – செலவு

| செலவு | | வரவு | |
|---|---|---|---|
| தபால், தந்தி | 5,376.50 | நன்கொடை | 1,72,101.00 |
| பிரிண்டிங் ஸ்டேசனரி | 6,771.40 | நுழைவுக்கட்டணம் | 2,350.00 |
| பிரிண்டிங் (வேட்டுவர் | | வட்டி | 45,951.00 |
| சமூக ஆவணங்கள்) | 40,000.00 | சந்தா | 46,000.00 |
| வங்கிகட்டணம் | 930.00 | புத்தக விற்பனை | |
| போக்குவரத்து செலவு | 428.00 | (சமூக ஆவணங்கள்) | 64,695.00 |
| பரிசுத் தொகை | 79,000.00 | | |
| புதுப்பித்தல் செலவு | 50.00 | | |
| உதவித்தொகை | 83,000.00 | | |
| நலவாரியம் | 1,396.00 | | |
| செலவு போக மீதி | 1,14,145.10 | | |
| | 3,31,097.00 | | 3,31,097.00 |

## கண்ணப்பர் கல்வி மடல் 31.03.2011 வரவு செலவு 31.03.2011 முடிய

| செலவு | | வரவு | |
|---|---|---|---|
| பிரிண்டிங் கூலி | 78,950.00 | விளம்பரம் | 21,925.00 |
| தபால் & கூரியர் | 8,047.25 | சந்தா | 63,660.00 |
| ஸ்டேசனரி | 2,082.00 | வட்டி | 8,937.28 |
| செலவு போக வரவு | 5,443.03 | | |
| | 94,522.28 | | 94,522.28 |

## ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை இருப்புநிலைக் குறிப்பு 31.03.2011

| சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|
| **மூலதனம்** | | வங்கிக்கணக்கு | |
| ஆரம்ப இருப்பு | 6,49,580.74 | I.O.B. SB A/c | 1,109.16 |
| கூட்டுக: | | Syndicate Bank | 7,478.70 |
| செலவு போக மீதி | 1,14,145.10 | ரொக்கம் | |
| (அறக்கட்டளை) | | கையிருப்பு | 1,051.28 |
| செலவு போக மீதி | 5,443.30 | நூலக வரவு | 8,605.00 |
| (கல்வி மடல்) | | டெபாசிட் | |
| நடப்பு பொறுப்புகள் | | I.O.B. F.D A/c. | 6,00,000.00 |
| மகாதேவி | 6,315.00 | Syndicate Bank F.D | 1,55,000.00 |
| | | நிலையான சொத்து | |
| | | டேபிள் சேர் | 2,240.00 |
| | 7,75,484.14 | | 7,75,484.14 |

| பரிசளிப்பு விழா நாள் | கல்வியாண்டு | உறுப்பினர் மற்றும் நுழைவுக்கட்டணம் | புதிய உறுப்பினர்கள் | அறக்கட்டளைக்கு கிடைத்த நன்கொடை | மாணவர்களுக்கு வழங்கிய தொகை | நிதியாண்டில் வைப்புத்தொகை | ஆண்டிறுதியில் அறக்கட்டளை மொத்த இருப்பு | மடல் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1999-2000 | 28,350/- | 27 | 15,000/- | | 40,000/- | 41,439.80 | |
| 23.7.2000 | 2000-2001 | 23,100/- | 22 | 26/793/- | 17,557/- | 20,000/- | 66,347.60 | |
| 15.7.2001 | 2001-2002 | 14,700/- | 14 | 19,706/- | 17,603/- | 12,000/- | 74,634.25 | |
| 7.7.2002 | 2002-2003 | 13,700/- | 14 | 25,608/- | 21,318/- | 13,000/- | 1,01,070.00 | |
| 6.7.2003 | 2003-2004 | 8,400/- | 8 | 27,661/- | 27,950/- | 10,000/- | 1,16,410.00 | |
| 30.6.2004 | 2004-2005 | 9,450/- | 9 | 40,504/- | 36,500/- | 25,000/- | 1,46,183.05 | |
| 10.7.2005 | 2005-2006 | 8,400/- | 8 | 46,352/- | 40,413/- | 14,000/- | 1,56,968.50 | |
| 9.7.2006 | 2006-2007 | 20,050/- | 21 | 65,628/- | 34,700/- | 22,000/- | 2,68,198.58 | 50,000/- |
| 8.7.2007 | 2007-2008 | 40,000/- | 40 | 61,034/- | 60,050/- | 77,000/- | 3,43,403.66 | 25,000/- |
| 6.7.2008 | 2008-2009 | 86,100/- | 82 | 85,616/- | 78,350/- | 1,37,000/- | 5,19,605.44 | 60,000/- |
| 5.7.2009 | 2009-2010 | 55,650/- | 53 | 1,22,960/- | 93,500/- | 1,25,000/- | 6,49,580.74 | |
| 11.7.2010 | 2010-2011 | 48,350/- | 47 | 1,72,101/- | 1,62,000/- | 1,05,000/- | 7,69,169.14 | 20,000/- |

மொத்த உறுப்பினர்கள் - 345

உறுப்பினர் விலகல் (இயற்கை எய்தல்) - 8

01.04.2011ல் உறுப்பினர்கள் - 337

1.4.2011 வரை உறுப்பினர் கட்டணம், நுழைவுக்கட்டணம் - 3,56,250.00